**OS.NO. 24/2024**

**PW2 :** குமார் த/பெ**.** ஆனந்தன்

**நாள்** : 19.11.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:.**

இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி மகேஷ் தான் இந்த வழக்கில் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். நான் A.C Technician தொழிலை சொந்தமாக செய்து வருகிறேன். நான் இரண்டு வழக்குகளில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி மகேஷ் எனது உறவினர் இல்லை. அவர் எனது நண்பர். பிரதிவாதியும் எனக்கு தெரிந்தவர் தான். கிரைய ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்துக்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

மொத்தம் 2 ஒப்பந்தங்கள் போடப்பட்டது. 2 ஒப்பந்தங்களில் நானும் தாமோதரனும், பசுபதியும் சாட்சி கையொப்பங்கள் இட்டுள்ளோம். மேற்படி 2 கிரைய ஒப்பந்தங்களின் தேதி தெரியுமா என்றால் தெரியும். அந்த தேதி 02.09.2021 மற்றும் 06.09.2021 ஆகும். 02.09.2021 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தில் எத்தனை பக்கங்கள் உள்ளது என்று சொன்னால் அதைப்பற்றி ஞாபகம் இல்லை. ஒப்பந்தத்தின் அனைத்து பக்கங்களும் முத்திரை தாளில் எழுதப்பட்டதா அல்லது பச்சை தாளிலோ, வெள்ளை தாளிலோ எழுதப்பட்டதா என்றால் இரண்டும் சேர்ந்தது போல் தான் இருந்தது.

06.09.2021 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தில் எத்தனை பக்கங்கள் உள்ளது என்று சொன்னால் அதைப்பற்றி ஞாபகம் இல்லை. ஒப்பந்தத்தின் அனைத்து பக்கங்களும் முத்திரை தாளில் எழுதப்பட்டதா

அல்லது பச்சை தாளிலோ, வெள்ளை தாளிலோ எழுதப்பட்டதா என்றால் மேற்படி ஆவணம் எழுதப்பட்டு பல ஆண்டுகள் ஆனதால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

வாதி மகேஷுக்காக வேறு ஏதாவது ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளேனா என்றால் இருக்கலாம். 02.09.2021 மற்றும் 06.09.2021 ஆகிய தேதிகள் எந்த கிழமைகளில் வந்தது என்றால் 02.09.2021 அன்று வியாழக்கிழமை, 06.09.2021 அன்று திங்கட்கிழமை. நான் கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் இடும் போது என்னுடன் யார், யார் எல்லாம் இருந்தார்கள் என்றால் 02.09.2021 அன்று பிரதிவாதி, வாதி, தாமோதரன் ஆகியோர்கள் உடன் இருந்தார்கள். 06.09.2021 அன்று என்னுடன் வாதி, பிரதிவாதி மற்றும் பசுபதி ஆகியோர்கள் உடன் இருந்தார்கள்.

02.09.2021 மற்றும் 06.09.2021 தேதிகளில் கையொப்பம் இட்ட கிரைய ஒப்பந்தங்களில் உள்ள சொத்துக்களின் விஸ்திரனம் எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தத்தில் ஆவண எழுத்தரின் பெயர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணங்களை எடுத்து வந்தவர் பிரதிவாதி தான்.

06.09.2021 அன்று எவ்வளவு தொகையை வாதி பிரதிவாதியிடம் ஒப்பந்த பத்திரப்படி கொடுத்தார் என்றால் ரொக்கமாக ரூ.20 லட்சம் கொடுத்தார். மீதம் ரூ.5 லட்சத்தை பத்திர பதிவின் போது கொடுப்பதாக எழுதப்பட்டது. 02.09.2021 அன்று தேதியிட்ட ஒப்பந்த பத்திரப்படி வாதி பிரதிவாதியிடம் ரூ.15 லட்சம் கொடுத்தார் மீதம் ரூ.15 லட்சத்தை 11 மாதங்களுக்குள் செலுத்தி விடுவதாக கொடுத்தார். ஆக

இரண்டு ஒப்பந்தங்களின் அடிப்படையில் எனக்கு தெரிந்து ரூ.35 லட்சத்தை வாதி பிரதிவாதியிடம் கொடுத்தார்.

இரண்டு கிரைய ஒப்பந்தங்களில் என்னை சாட்சியாக இருக்குமாறு வாதி தான் அழைத்தாரா என்றால் நானும் வாதியும் இருந்த போது 02.09.2021 அன்று பிரதிவாதி தான் வாதியின் வீட்டிற்கு வந்தார். எனக்கு வாதி பழக்கம் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறன் என்றால் அவ்வாறு கூறவேண்டும் என்று அவசியம் இல்லை.

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் ரூ.60 லட்சம் 4 தவணைகளாக கொடுக்கப்பட்டது என்று கூறியுள்ள விவரம் தவறு என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கூறியதன் அடிப்படையில் தான் சாட்சி கையொப்பம் போட்டேன்.

நான் வாதிக்கு சாதகமாக சாட்சியம் அளிப்பதால் நான் பிரதிவாதி கூறாத விவரங்களை நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கூறியதன் அடிப்படையில் தான் சாட்சி கையொப்பம் இட்டேன் என்ற சங்கதியை பிரமாண வாக்குமூலத்தில் கூறாததால் தான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.20 19:01:54 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.